# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.17020/F/2024**

திரு. செல்வராஜ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
குத்தாலம் - 609 801, மயிலாடுதுறை மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 29.08.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 30.09.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஆ. ஜெயராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், குத்தாலம், மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், குத்தாலம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சசிகுமார் என்பவர் பணியில் சேர்ந்த விவரம், அவர் பணியில் சேர்ந்ததற்கான உத்தரவு ஆணை பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்கத்தின் நகல், பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட அவரது சொத்து பற்றிய விவரங்கள், அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பயணம்செய்த நாட்குறிப்பு மற்றும் சலணப்பதிவேட்டின் நகல், அவர் வகித்த வந்த பதவியின் பெயர் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*4. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. மேலும், அவர் 12.04.2025 தேதியிட்டு தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், தனக்கு காணொளி காட்சி வாயிலான விசாரணை தேவையில்லை என்றும் நேரடி விசாரணை தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனை இவ்வாணையம் ஏற்று, மேற்படி மனுதாரரின் வழக்கானது தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.17020/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
குத்தாலம் - 609 801, மயிலாடுதுறை மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.17020/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு. செல்வராஜ், த/பெ., சொக்கலிங்கம்,
எண்.32, காமுட்டிகோவில் தெரு,
கூத்தியம்பேட்டை, திருமைலாடி,
சீர்காழி வட்டம், மயிலாடுதுறை மாவட்டம்.

Copy to: File
SNPS / 22.04.2025